# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 114/2021 | Village | : | |
| Prosecution witness | : | PW -21 | Taluk | : | |
| Name | : | ராகவன் | Occupation | : | |
| Father Name | : | சமுத்திரம் | Age | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 11.06.2025**

**All Accused present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் காந்திநகர் பள்ளிக்கிரகாரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கில் இறந்துபோன குணசீலனை தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. நான் பள்ளிக்கிரகாரம் மீன் கடையில் நின்றிருந்தபோது என்னிடமும், சிலம்பரசனிடமும் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து போட்டு கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2வதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் மட்டும் **அ.த.சா.ஆ.8** மற்றும் **அ.த.சா.ஆ.9**. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 2வதாக உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் மட்டும் **அ.த.சா.ஆ.10** மற்றும் **அ.த.சா.ஆ.11.** போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸார் என்னை விசாரித்தபோது நானும் சிலம்பரசன் என்பவரும் மனகரம்பை பைபாஸ் ரவுண்டானா அருகில் உள்ள பேக்கரி அருகில் பேசிகொண்டிருந்தபோது போலிஸார் எதிரிகள் மணிகண்டன், கார்த்திக் ராஜா ஆகியோரை கைது செய்தார்கள் என்றும் அப்போது எதிரிகள் தன்னிச்சையாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அதற்கு நானும், சிலம்பரசன் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எதிரிகள் மணிகண்டன் கார்த்திக்ராஜா ஆகியோர் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த போலிஸார் கைபற்றுதல் மகசரில் கைபற்றி

கொண்டார்கள் என்றும், வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் இட்ட காகிதத்தில் விபரங்கள் எதுவும் எழுதப்படாமல் இருந்தது என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.